ஊடக வெளியீடு

# வடக்கு மாகாண மக்களுக்கும் மற்றும் வடக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நிர்மாண மற்றும் பராமரிப்பு உதவிகளை வழங்குவதற்கான ஒற்றைச் சாளர பொறிமுறை

நோக்கங்கள்

- அரச நிலங்களை ஏழைகளுக்கு பகிர்ந்தளித்து வீடு கட்டுவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல்.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாகவோ அல்லது முதலீட்டு சபை ஊடாகவோ வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு கையளிக்கப்படும் காணிகளில் வெளிநாட்டு பயனாளிகள் வீடு கட்டுவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல்.
- வடக்கு மாகாணத்தில் நிர்மாணம் மீள்நிர்மாணம் அல்லது கட்டட பராமரிப்பு சேவைகளை எதிர்பார்க்கும் வடக்கு மாகாண உத்தியோகத்தர்களும் மற்றும் வடக்கு மாகாண தனியார் நில உரிமையாளர்களும் இத்திட்டத்தினால் பயனடையலாம்.
- வடக்கு மாகாணத்தில் நில உரிமைகளை கொண்ட நிர்மாணம் மீள்நிர்மாணம் அல்லது கட்டட பராமரிப்பு சேவைகளை எதிர்பார்க்கும் வெளிநாட்டில் வதிவோரும் இத்திட்டத்தினால் பயனடையலாம்.

**கோரிக்கைகளை பெற்று அதனுடன் தொடர்புடைய விடயங்களினை ஆராய்ந்து வாடிக்கையாளருடன் ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் செயன்முறை 30 நாட்களினை விஞ்சலாகாது.**

- இக் கட்டுமானங்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் விபரக்குறிப்புகளுக்கு அமைவாக இருப்பதோடு பசுமையானதும், சுற்றுச் சூழலுக்கு ஏற்புடையதும் கலாச்சார விழுமியங்களினை பிரதிபலிப்பதாகவும் இருப்பதோடு செலவு குறைந்த அணுகுமுறைகளை உள்ளடக்கி இருப்பதனை உறுதி செய்ய வேண்டும் என்பதே அடிப்படைக் கொள்கை ஆகும்.
- இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக மாகாண கட்டடங்கள் திணைக்களம் செயற்படும். அத் திட்டத்தினை கண்காணிக்கும் நிறுவனமாக ஆளுநர் செயலகம் செயற்படுவதுடன் அக் கண்காணிப்பு குழுவில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் அல்லது கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள், உள்ளூராட்சி ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் பணிப்பாளர் கட்டடங்கள் திணைக்களம் ஆகியோர் உள்ளடங்குவார்கள்.
- தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பெறுகை வழிகாட்டியின் 4.3.1 & 4.3.2 அமைய மேற்படி சேவைகளை வழங்குவதற்கான கட்டணத்தினை (7% விட விஞ்சலாகாது) வடக்கு மாகாண சபை அறவீடு செய்யும். குறைந்த விலையிலான கட்டுமாணம் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களுக்கு வசூலிக்கப்படும் கட்டணம் 5% இனை விஞ்சாதவகையிலும் ஏழைகளுக்கான கட்டணம் 3% ஆகவும் காணப்படும். ஒற்றைச் சாளர பொறிமுறையின் அனுசரணையுடன் இத் திட்டத்தினால் பயன்பெறும் பயனாளிகளே உள்ளூராட்சி மன்ற அறவீடுகள், தொழிலாளர் மற்றும் கட்டுமான மூலபொருட்களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றினை நேரடியாக மேற்கொள்ள வேண்டும்.

**இச் செயற்பாடு ஆனது கீழ் குறிப்பிடப்படும் பிரதான படிமுறைகளை கொண்டிருக்கும்.**

- பயனாளி மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் உள்ள மாதிரி வரைபடங்களில் ஒன்றை தெரிவு செய்வதன் ஊடாகவோ அல்லது தனது சொந்த வரைபடத்தினை கட்டடங்கள் திணைக்களத்திற்கு முன்மொழிவதன் ஊடாக கட்டடங்கள் திணைக்களம் அதற்கான வரைபடம் மற்றும் விபரக்குறிப்புக்களை இறுதி செய்ய ஆவண செய்யும்.
- கட்டடங்கள் திணைக்களமானது தேவையான கள ஆய்வுகளை மேற்கொண்டு வடிவமைப்பு, வரைபடங்கள், விபரக்குறிப்புகள் மற்றும் கணிய அளவு சிட்டைகள் என்பவற்றினை தயார் செய்யும்.
- நில உரிமை தொடர்பான நம்பகத்தன்மையினை நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை ஆகியவற்றின் உறுதிப்படுத்தலின் அடிப்படையிலும் கட்டடங்கள் திணைக்களத்தினால் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு பயனாளியினால் வழங்கப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலும் கண்காணிப்பு குழு கட்டுமானத்திற்கான அனுமதியினை வழங்கும்.
- திட்ட பயனாளிக்கும் மாகாண கட்டடங்கள் திணைக்களத்திற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கைசாத்திடப்படும்.
- மாகாண கட்டடங்கள் திணைக்களமானது பயனாளிகளுக்கு தன்னால் தயாரிக்கப்பட்ட கணிய அளவு சிட்டைகளின் அடிப்படையில் தேவையான மூலப் பொருட்களின் அளவு, தொழிலாளிகளின் தேவைப்பாடுகள் தொடர்பான விபரங்களினை வழங்கும்.
- கட்டங்கள் திணைக்களமானது பயனாளிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் வட்டத்தின் ஊடாக மூலப் பொருட்கள், தொழிலாளர்கள் மற்றும் இயந்திரங்களினை பெற்றுக் கொள்வதற்கு அனுசரணை செய்யும்.
- கட்டடங்கள் திணைக்களமானது நியம விபரக்குறிப்பு, வரைபடங்கள் மற்றும் கணிய அளவு சிட்டைகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய வேலை நடைபெறுவதனை மேற்பார்வை செய்து உறுதி செய்யும்.
- கட்டடங்கள் திணைக்களமானது உறுதிப்படுத்தல் சான்றிதழை பெற்றுக் கொள்ள ஒத்துழைப்பு வழங்கும்.

ஆர்வமுள்ளவர்கள் தேவையான மேலதிக விபரங்களினை மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், மாகாண கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் ( தொ.பே.இல 0212228091 தொலை நகல் 0212212700) இல் வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

எஸ்.எம்.சமன் பந்துலசேன
பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம்.